**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, NAMAKKAL**

**<u>O.S.No.546/2024</u>**

**10.06.2026**

**D.W.1 – திரு. முருகேசன்**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கு வாதிகள் என் உடன்பிறந்த சகோதரிகள். 1ம் பிரதிவாதி அருண்ராஜ் என் மகன். 1ம் பிரதிவாதிக்காகவும் சேர்ந்து நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன். தாவா சொத்துக்கள் என் தாயார் லட்சுமியம்மாவால் 16.09.1985ல் சுயமாக கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். என் தாயாருக்கு தற்போது சுமார் 85 வயதாகிறது. அவருக்கு எழுதப்படிக்க தெரியாது. என் தாயார் வாங்கிய கிரைய பத்திரத்தில் சர்வே எண் தவறுதலாக எழுதப்பட்டு அது 1987ம் வருடம் திருத்தல் பத்திரத்தின் மூலம் திருத்தல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பிழைதிருத்தல் பத்திரம் ஏற்பட்ட விவரம் 2016ல் தான் தெரியும். பிழைதிருத்தல் பத்திரம் பதிவுக்காக தாக்கல் செய்தபோதே அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் லாரி ஒர்க் ஷாப் வைத்திருக்கிறேன். என் தாயார் கிரையம் வாங்கிய பிறகு, தாவா சொத்தில் 3 வீடுகளை கட்டினார் என்றால் சரிதான். அதன் கதவு எண்கள் தெரியும். அவை 35ஏ, 35பி. மற்றொரு வீட்டின் கதவு எண் தெரியாது. வீடு கட்டிய பிறகு, நானும், என் தாயாரும், சகோதரிகளும் தாவா சொத்தில் உள்ள வீட்டில் சேர்ந்து குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். தாவா வீடு கட்டிய சமயம் எனக்கு 15 வயது தான் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அப்போது எனக்கு 20 வயது ஆகும். விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு கிராமத்தில் உள்ள விவசாய

நிலங்களை ரூ.52 லட்சத்திற்கு நான் வாங்கிய கடனை தீர்ப்பதற்காக விற்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கு தாவா சொத்தை தவிர, சேலம் ரோட்டிலும் ஒரு சுய சம்பாத்திய சொத்து உள்ளது. அதன் சர்வே எண்.193/2 என்றால் சரிதான். நான் செய்து வந்த லாரி பட்டறை தொழிலை விரிவு செய்வதற்காக லோன் போட வேண்டுமென்று சர்வே எண்.193/2 ல் உள்ள நிலத்தை எழுதிக்கொடுக்க சொல்லி என் தாயாரை கட்டாயப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்பேரில், அந்த சொத்தை பொறுத்து என் தாயாரிடமிருந்து 06.03.2009ல் செட்டில்மெண்ட் எழுதி வாங்கினேன் என்று சொன்னால் என் தாயாராகவே அந்த பத்திரத்தை எழுதி வைத்தார். நான் சப்-ரிஜிஸ்டர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. சேலம் ரோட்டில் உள்ள சொத்தை எழுதி வாங்குவதாக சொல்லி என் தாயாரை கூட்டி சென்று நம்பவைத்து, மோசடி செய்து, தாவா சொத்தை எனது மகனான 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வாங்கிகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கும், என் அம்மா தான் விருப்பப்பட்டு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அந்த பத்திரம் பதிவு செய்தவற்கும் நாங்கள் சப்-ரிஜிஸ்டர் அலுவலகத்திற்கு போகவில்லை. என் தாயாரை ஏமாற்றி மோசடியாக 1ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வாங்கியதால் என் தாயார் அந்த ஆவணத்தை 12.04.2011ல் ரத்து செய்துவிட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் பெயருக்கு ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அரசு ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சாட்சிகளை நான் விசாரிக்க

போவதில்லை. என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் என் பெற்றோர்கள் ஆயுட்காலம் வரை குடியிருக்க உரிமையுண்டு செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சொத்துக்களில் முழுமையான சுவாதீனம் 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. 12.04.2011க்கு பிறகு, 4 ஆண்டுகள் கழித்து 30.11.2015ம் தேதி என் தாயார் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு, தாவா சொத்தின் பேரில் 1ம் வாதி அடமானக்கடன் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அவர்கள் பெயர்களுக்கு அரசு ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து 07.04.2017-லிருந்து வீட்டுவரி, குடிநீர்வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வீட்டுவரி, குடிநீர்வரியை நான் செலுத்தியதை காட்டும் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல, நானும் என் தகப்பனாரும் சேர்ந்து வாதிகளுக்கு தனித்தனியாக வீடுகள் கட்டி கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு நானும், என் தகப்பனாரும் சேர்ந்து காலிமனையை கிரையம் வாங்கி வீடு கட்டி கொடுத்தோம் என்பதை காட்டும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட பிறகு வாதிகள் எங்களிடம் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை பலமுறை

கேட்டும் நாங்கள் தாவா சொத்தை காலி செய்து சுவாதீனம் கொடுக்காமல் இருந்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் கோரியப்படி வாதிகளுக்கு விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கிடைக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.